# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No.90/2017
# வழக்கு சாட்சி PW-4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜசேகர் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 12th, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**குறுக்கு விசாரணை :**

1 மற்றும் 2 எதிரிகள் உள்ளூர்காரர்கள் என்ற அடிப்படையில் அவர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அரசமுத்துவின் போன் நம்பர் எனக்கு தெரியும். போன் நம்பர் என்னால் தற்போது கூற முடியாது. நான் வல்லம், காமராஜர் தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் வல்லம், நடுத்தெரு என்றால் சரிதான். ஸ்டீபன்ராஜிற்கு அடிபடும் போது நான் தடுக்க முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். ஸ்டீபன்ராஜின் உடம்பில் இருந்த இரத்தம் என் சட்டையிலும் பட்டது என்றால் சரிதான். அடிபட்ட ஸ்டீபன்ராஜை நான் மருத்துவமனைக்கு கொண்டு செல்லவில்லை என்றால் சரிதான். செங்கோட்டை அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக ஸ்டீபன்ராஜ் எவ்வாறு சென்றார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஸ்டீபன்ராஜின் காயத்திற்கு எனது துணியை கிழித்தோ அல்லது

அவரது துணியை கிழித்தோ கட்டு எதுவும் போடவில்லை என்றால் பக்கத்து வீட்டிலிருந்து துணி வாங்கி கட்டு போடப்பட்டது. நானும், காயம்பட்ட ஸ்டீபன்ராஜீம் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்பதினால் நான் ஸ்டீபன்ராஜிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் இல்லை என்றும், நான் பார்க்காத சம்பவத்தை பார்த்தது போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.